செய்தி வெளியீடு எண்: 616 நாள்:20.09.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் 19.9.2019 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்களும், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி திறனில் சாதனை படைத்ததற்காக 2017–18ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் ''கிரிஷி கர்மான்'' விருதுக்கு ஐந்தாவது முறையாக தமிழ்நாடு அரசு தெரிவு செய்யப்பட்டதற்கான கடிதத்தினை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

வேளாண் விளைபொருட்களின் உற்பத்தி மற்றும் அதன் திறனை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவதற்கும், மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. 2011–12ஆம் ஆண்டில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டாம் பசுமைப் புரட்சி மற்றும் உணவு தானிய இயக்கத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் உணவுதானிய உற்பத்தியில் தற்போது இருமடங்கு சாதனை அடையப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் முயற்சிகளாலும், உற்பத்தித் திறனை அதிகரிக்க வேளாண் துறையால் கடைப்பிடிக்கப்பட்ட புதிய சாகுபடி தொழில்நுட்பங்களாலும், வேளாண் உற்பத்தியில் உள்ள இடைவெளியினைக் குறைத்து, தமிழ்நாடு 2011–12, 2013–14, 2014–15 மற்றும் 2015–16 ஆகிய வருடங்களில் 100 இலட்சம் மெட்ரிக் டன்னிற்கும் அதிகமாக உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை அடைந்துள்ளது.

தமிழக அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளால் தமிழகத்தில், வேளாண் உற்பத்தி அதிகரித்து உயரிய சாதனை அடைந்ததற்காக நான்கு முறை மத்திய அரசு **''கிருஷி கர்மான்'' விருதினை தமிழ்நாடு அரசுக்கு வழங்கியுள்ளது.** முதலாவதாக 2011–12ஆம் ஆண்டில் 101.52 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி

செய்து சாதனை அடைந்ததற்காகவும், 2013–14 ஆம் ஆண்டில் 6.14 இலட்சம் மெட்ரிக் டன் பயறுவகை உற்பத்தி செய்து சாதனை அடைந்ததற்காகவும், 2014–15ஆம் ஆண்டில் 40.79 இலட்சம் மெட்ரிக் டன் சிறுதானிய உற்பத்தி செய்து சாதனை அடைந்ததற்காகவும், 2015–16 ஆம் ஆண்டில் மீண்டும் உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை அடைந்ததற்காகவும், இவ்விருதுகள் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, 2016–17ஆம் ஆண்டில் தமிழகத்தில் கடும் வறட்சி நிலவிய போதும், அரசின் சீரிய முயற்சிகளினால் 2017–18 ஆம் ஆண்டிலும் 107.133 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை எய்தப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக எண்ணெய் வித்துக்களில் 10.382 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியும், உற்பத்தித் திறனில் எக்டருக்கு 2,729 கிலோ என்ற அளவிலும் அதிகரித்துள்ளது. இது அகில இந்திய சராசரி உற்பத்தித் திறனான எக்டருக்கு 1284 கிலோ என்ற அளவை விட இருமடங்கிற்கும் அதிகமாக, அதாவது 113 சதவீதம் அதிகரித்துள்ளது. எண்ணெய்வித்துப் பயிர்களில் தமிழ்நாட்டின் இச்சாதனைக்காக, 2017–18ஆம் ஆண்டின் ''**கிருஷி கர்மான்**'' விருதுக்கு தமிழ்நாடு தற்போது மத்திய அரசினால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த விருதினையும் சேர்த்து, **2011–12ஆம் ஆண்டு முதல் 2017–18 ஆம் ஆண்டு வரை, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி புரிந்துவரும் இவ்வரசு, வேளாண்மைத் துறையில் ஐந்து முறை கிருஷி கர்மான் விருதினைப் பெற்று சாதனை படைத்துள்ளது.**

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு. வி. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**